[31st March 1964

THE HON. SRI R. VENKATARAMAN : (a) to (d) A statement[a] is placed on the Table of the House.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தமாதிரி மோசடி செய்த கூட்டுறவு சங்கங்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் இந்த ஸ்டேட்மெண்டில் எலாபரேட்டாக எழுதி வைத்திருக்கிறோம். மோசடி நடக்கவில்லை. நடப்பதற்கு முன்னால் தடுத்து விட்டோம். அதைத்தான் கனம் அங்கத்தினர் புரிந்துகொள்ளவேண்டும். அவர்களெல்லாம் தவறான, ஃபால்ஸ் ரிபேட் க்ளெயிம் போட்டார்கள். நாம் அவைகளை அனுமதிக்கவில்லை. நாம் கொடுத்திருந்தால் அப்போது அது மோசடி, மோசடி நடந்து விட்டது என்று சொல்லலாம். ஆனால் நாம் கொடுக்கவில்லை. உடனடியாக பரிசீலனை செய்து நிறுத்திவிட்டோம்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தமாதிரி அவர்கள் ஃபால்ஸ் க்ளெயிம் செய்ததை ஏதாவது புகார் வந்ததன் மீது பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அல்லது சர்க்கார் தணிக்கை முறையிலே அது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏதோ ஒரு நாள் அசெம்பிளியில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது ரிபேட் க்ளெயிமைப் பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென்று ராமநாதபுரத்திலும், இன்னும் இரண்டு பகுதிகளிலும் விற்பனை ஆகிற அளவுக்கு அதிகமாக ரிபேட் வந்த மாதிரி தெரிந்தது. அதை மார்க் பண்ணி நிர்வாக அதிகாரிகள் இதைப் பற்றிப் பரிசீலனை செய்யவேண்டுமென்று எழுதி அனுப்பினேன். இந்த முறையில் நான்தான் முதலில் இதைக் கண்டுபிடித்தது. தணிக்கையெல்லாம் பின்னால் தான் நடந்தது.

* 449 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the results of investigation into the alleged fraudulent claims for rebate on the sale of handloom cloth by Weavers' Co-operative Societies in Tirunelveli district have been received; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) A statement[b] explaining the position is placed on the Table of the House.

அக்கினி ஆற்றில் அணை கட்டுதல்

* 451 கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

---

a Printed as Appendix I on pages 842–847.
b Printed as Appendix II on pages 847–849.

(அ) திருச்சி, தஞ்சை மாவட்ட எல்லையில் இருக்கும் கரம்பக்குடிக்கு அருகில் உள்ள அக்கினி ஆற்றில் அணை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) அதற்கு வேண்டிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு விட்டனவா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The scheme is under investigation. Plans and estimate will be prepared after the investigation is completed.

திரு. பி. முருகையன் : *தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *4,207 ஏக்கருக்கு இதனால் நன்மை ஏற்படலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.*

திரு. பி. முருகையன் : *தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் அதிகப்படியான நிலங்கள் சேதம் அடைகின்றன என்று எந்த அரசியல் கட்சியாவது மாநாடு நடத்தி தீர்மானம் அனுப்பி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *குறிப்பாகச் சொல்ல முடியாது. பொதுவாக இந்தத் தண்ணீர் திட்டங்களெல்லாம் வேண்டுமென்று சொல்லுவதற்கு மாநாடு நடத்துவது நம் நாட்டின் பழக்கம்.*

நீர்ப்பாசன வசதிகள் (விருத்தாசலம் தாலுகா)

452 கேள்வி—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தாலுகாவிலே "சின்னத்துவாரி" ஓடையில் ஒரு அணை கட்ட உத்தேசமுண்டா?

(இ) விருத்தாசலம் தாலுகா பெண்ணாடம் பிர்க்கா கோனூரில் உள்ள பழைய நீர்ப்பாசன ஏரியை மறுபடியும் புதுப்பிக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *(அ) சின்னத்துவாரி ஓடையில் 6/6 மைலில் ஒரு மட்டம் சுவரும் இடது கரையில் அதையொட்டி ஒரு தலைமடையும் கட்டப்பட்டுள்ளன. அந்த தலைமடையிலிருந்து கோனூர் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு போக 2,500 அடி நீளமுள்ள ஒரு கால்வாயும் வெட்டப்பட்டுள்ளது.*

(இ) ஏரி 1949-50-ல் புதுப்பிக்கப்பட்டது.

திரு. கி. நாராயணசாமி பிள்ளை : *தலைவர் அவர்களே, இதற்காக எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.*